தினமணி 21.06.2019

# டிஎன்பிஎல் சார்பில் நலிவுற்ற குழந்தைகள் இலவசக் கல்வி பயில நிதியுதவி

கரூர், ஜூன் 20: டிஎன்பிஎல் சமுதாயப் பணி திட்டத்தின் கீழ்

ஆலையைச் சுற்றியுள்ள கிராமத்தைச் சேர்ந்த நலிவுற்ற சமுதாய குழந்தைகள் 2 பேருக்கு பிளஸ்-2 வரையில் இலவச கல்வி பயில நிதியுதவி புதன்கிழமை வழங்கப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாயப்பணி திட்டத்தின் கீழ் காகித ஆலை பேரூராட்சிக்குட்பட்ட ஓனவாக்கல்மேடு கிராமத்தைச் சேர்ந்த நலிவுற்ற சமுதாயத்தைச் சார்ந்த குழந்தைகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு டிஎன்பிஎல் பள்ளியில் கட்டணமில்லாக் கல்வி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 2019 - 2020 ஆம் கல்வி ஆண்டில் எல்கேஜி பயில்வதற்காக ஓனவாக்கல்மேடு கிராமத்தைச் சார்ந்த சித்தேஷ் மற்றும் வினிஷா ஆகிய 2 குழந்தைகள் தேர்வு செய்யப்பட்டனர். இக்குழந்தைகளுக்கு எல்கேஜி முதல் பிளஸ்-2 வரை கட்டணமில்லா கல்வி உள்பட அனைத்து செலவுகளையும் டிஎன்பிஎல் செலுத்தும்.



கட்டணமில்லாக் கல்வி பயில தேர்ந்தெடுக்கப்பட்ட குழந்தைக்கு பள்ளி சேர்க்கைக்கான கடிதத்தை வழங்குகின்றனர் டிஎன்பிஎல் ஆலை நிர்வாகிகள்.

இக்குழந்தைகளுக்கு பள்ளி சேர்க்கைக்கான ஆணை வழங்கும் நிகழ்ச்சி மற்றும் நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சி ஆலை வளாகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சியில், காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன் மற்றும் முதன்மை பொது மேலாளர் (மனிதவளம்)பட்டாபிராமன், முதன்மை பொது மேலாளர் (வணிகம் மற்றும் கருவியியல்) பாலசுப்ரமணியன், முதன்மை பொது மேலாளர் (உற்பத்தி)தங்கராஜூ ஆகியோர் கட்டணமில்லா கல்வி பயில்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 2 குழந்தைகளுக்கான ஆணையை அவர்களது பெற்றோர்களிடம் வழங்கினர்.